# செயலாற்றுகை அறிக்கை - 2016

## அரசிறைக் கொள்கைகள் திணைக்களம்
## நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
## கொழும்பு 01

# ள்ளடக்கம்

**பக்கம்**


| | | |
|---|---|---|
| 1. | திணைக்கள முகக்குறிப்பு | 01 |
| 2. | அரசிறை அபிவிருத்திகள் - 2016 | 03 |
| 3. | ஆண்டின் செயலாற்றுகை- 2016 | 08 |
| 4. | நிர்வாகம் மற்றும் கணக்குகள் | 16 |

# 1. திணைக்கள முகக்குறிப்பு

## 1.1 அறிமுகம்

நாடு எதிர்பார்க்கின்ற சமூக மற்றும் பொருளாதார குறிக்கோள்களை அடையும் வகையில் அரச, தனியார் மற்றும் சர்வதேச முகவர் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து பரந்தளவிலான அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைச்சட்டகத்தினுல் அரசிறைக் கொள்கையினை உருவாக்குவதும் மற்றும் அதனைச் செயற்படுத்துவதும் அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் முக்கிய இலக்காகும்.

நாட்டின் அரசிறைக் கொள்கையில் எதிர்பார்க்கப்படுகின்ற விளைவுகளை அடைவதற்ககுத் தேவையான மிகச் சரியான சீர்செய்கைகளை மேற்கொள்வதற்கு வசதியளிக்கும் வகையில், வருமானம், செலவினம் நிதியளிப்புச் செயற்பாடுகள் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பேரண்டப் பொருளாதார அபிருத்திகள் என்பவற்றை பகுப்பாய்வுசெய்தல் அதேபோன்று, நாட்டின் வரி விதிப்புக் கொள்கைகளை உருவாக்கல் என்பன இத்திணைக்களத்தின் முக்கிய பொறுப்பாகும்.

அரசிறை முகாமைத்துவப் (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் அரசிறை மூலோபாயக் கூற்று, வரவுசெலவுத் திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை, அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை, இறுதி வரவுசெலவுத் திட்ட நிலைமை அறிக்கை மற்றும் தேர்தலுக்கு முன்னரான வரவுசெலவுத் திட்ட நிலைமை அறிக்கை என்பன உள்ளடங்கலாக மேற்குறித்த அறிக்கைகளை வெளியிடுவதும் இத்திணைக்களத்தின் முக்கிய பணியாகும்.

## 1.2 .தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று

## தொலைநோக்கு

‘‘நிலைபேறான அரசிறைக் கொள்கையொன்று வகுத்தமைக்கப்படுவதை உறுதி செய்தல்’’

### பணிக்கூற்று

அரசின் அகல் விரிவான அபிவிருத்திச் செயற்பாட்டு வரையறையினுள் அரசிறைக் கொள்கையை வகுத்தமைத்தலும் அமுல்படுத்தலும்

## 1.3.திணைக்களத்தின் பணிகள்

- தனிப்பட்ட, அரசாங்க மற்றும் சா்வதேச பிரதிநிதிகளை ஒருங்கிணைத்து நடுத்தர கால வரவு செலவுத் திட்ட சட்டகத்தினுள் அரசிறைக் கொள்கையை வகுத்தமைத்தலும் அமுல்படுத்தலும்.
- வரிக்கொள்கை மற்றும் அதனோடு தொடர்பான பிற சட்ட ஏற்பாடுகளை தயாரித்தல். (சுங்கத்தீர்வை மற்றும் பிற விசேட பொருட்களுக்கான வரி நீங்கலாக)
- அரசாங்க வருமானம் மற்றும் பெறுகை உள்ளடங்கலாக அரசிறை எண்ணக்கருக்கள் மற்றும் அரசிறைச் செயற்பாடுகளினை முகாமை செய்தலும் விதப்புரை செய்தலும்.
- 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் அனைத்து அறிக்கையிடல்களையும் செயற்படுத்துதல்.

## 1.4 அலுவலக கட்டமைப்பு - 2016



# 2 அரசிறை அபிவிருத்திகள் – 2016

## 2.1 மேன்நோக்கு

அரசாங்கத்தின் அரசிறைக் கொள்கையானது அரசிறையின் நிலைபேரான தன்மையினையும் பேரண்டப் பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மையினையும் உறுதிப்படுத்தும் நோக்குடன் ஒருங்கிணைக்கப்படுகிறது. 2016 ஆம் ஆண்டில் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையினைக் குறைக்கும் நோக்கில் அரசிறைத் திரட்சிச் செயன்முறையானது நடுத்தர காலத்தில் படுகடன் ஒன்றுசேர்தலைக் கட்டுப்படுத்துவதன் மூலம் தொடரப்பட்டது. 2016 இல் மொத்தச் செலவினக் குறைப்புடன் இணைந்த வகையில் அதிகரித்த அரசிறைச் சேகரிப்புகளின் விளைவாக வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையானது 2015 இல் பதிவாக்கிய மொ.உ.உற்பத்தியின் 7.6 சதவீதத்திலிருந்து மொ.உ. உற்பத்தியின் 5.4 சதவீதத்திற்கு குறைவடைந்து அரசிறைத் திரட்சி அடையப் பெற்றுள்ளது. வெளிநாட்டு

நாணய நியதி நிதியிடல் வசதி(ETFF) மற்றும் சர்வதேச நாணய முறிகள் விநியோகம் (ISBS)போன்ற பிரதான வெளிநாட்டு மூலங்கள் மூலம் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு நிதியிடப்பட்டது. எனினும், மொ.உ.உற்பத்தி சதவீதத்தில் படுகடனானது குறிப்பாக, பெயரளவில் மொ.உ.உற்பத்தி குறைந்த வளர்ச்சி காரணமாக, 2015 இல் மொ.உ.உற்பத்தியின் 77.6 சதவீதத்திலிருந்து 2016 இல் 79.3 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. அரசாங்க செலவினத்தனை ஒழுங்குபடுத்தி மொ.உ.உற்பத்தி சதவீத்தில் அரசாங்க வருமானத்தின் வீழ்ச்சிப் போக்கினை மேல்நோக்கி நகர்த்துவதற்கான பல நடவடிக்கைகள் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைய, வரி அடிப்படையிலான விரிவாக்கல், வரிமுறைமையினை இலகுபடுத்தல், வரி விலக்களிப்புக்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் வரி சேகரிப்பு நிலையங்களில் வரி நிருவாகத்தினைப் பலப்படுத்தல் என்பன மூலம் அரசாங்கம் அரச வருமானத்தினை அதிகரிப்பதற்குப் பல்வேறுபட்ட வரி மறுசீரமைப்புக்களை அமுல்படுத்தியது. அவ்வாறே, நலனோம்பு செலவினம், செலவின அர்ப்பணிப்புக்களை கண்காணிப்பதைத் திருத்துதல், ஒன்றுதிரட்டப்பட்ட திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையினை ஆரம்பித்தல் (ITMIS),அரசுடைமை வியாபார தொழில்முயற்சிகளின் மேம்பட்ட நிதி செயலாற்றுகை என்பனவற்றில் செலவினத்தினை ஒழுங்குபடுத்துதல் என்பவற்றின் மீது அரசாங்கம் பல்வேறுபட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்தியது. அரசுடைமை வியாபார தொழில்முயற்சிகளினால் பரிமாற்றம் செய்யப்பட்ட இலாபம் மற்றும் பங்கிலாபம் என்பவற்றால் தூண்டப்பட்ட வரியல்லாத வருமானத்தின் கணிசமான விரிவாக்கம் காரணமாக அரசாங்க வருமானம், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2015 இல் 13.3 சதவீதத்திலிருந்து 2016 இல் 14.2 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது.

அரசிறை அபிவிருத்தியின் முக்கிய அம்சங்கள் பின்வருவனவற்றினை உள்ளடக்குகின்றன.

(அ). வரி விதிப்பனவு மற்றும் வரி நிருவாகம் என்பனவற்றில் அறிமுகப்படுத்தப்பட்ட மறுசீரமைப்புக்கள் அரசாங்க வருமானத்தின் செயற்றிறனை கணிசமாக மேம்படுத்தின.

(ஆ). பல தசாப்தங்களாக நீண்ட வருமான வீழ்ச்சியின் விளைவாக அரசாங்கத்தின் காசுப் பாய்ச்சல் மீது படுகடன் சுமைகள் பெரும் அழுத்தத்தினைச் சுமத்தியது.

(இ). அங்கீகரிக்கப்பட்ட எல்லை அல்லது வருடத்துடன் ஒப்பிடும் போது 2016 இல் கடன் பெறுகை கணிசமான அளவு குறைவடைந்து வருமான சேகரிப்பு அதிகரித்துள்ளது.

(ஈ). மேம்பட்ட வருமானத் திரட்டு மூலம் உருவாக்கப்பட்ட மேலதிக அரசிறைத் திரட்சியானது குறிப்பாக, சமூக பாதுகாப்பு மீதான அரசாங்கத்தின் மேம்பட்ட வினைத்திறன்மிக்க செலவினத்தின் விளைவாக, விவேகமான செலவின முகாமைத்துவத்தின் மூலம் மேலும் ஆதரவளிக்கப்பட்டுள்ளது.

(உ). நம்பகமான அரசிறைத் திரட்சிக்கு வழிவகுத்த வருமானம் மற்றும் செலவினம் மீதான புத்திசாதுரியமான முகாமையானது, குறைந்த அரசிறைப் பற்றாக்குறை மற்றும் குறிப்பிடத்தக்களவு குறைந்த ஆரம்ப மீதி என்பவற்றால் அடையாளப்படுத்தப்பட்டது.

மொ.உ. உற்பத்தி வீதமாக வரிவருமானம் 2016 இல் 12.4 சதவீதத்தினை பதிவு செய்து மாற்றமுறாது காணப்படுவதற்கு மறுசீரமைப்புக்கள் உதவின. சாதாரண நிலைமைகளின் போது, மொத்த வரி வருமானம் 2015 இல் பதிவாக்கிய ரூபா 1,454.9 பில்லியனோடு ஒப்பிடுகையில் 2016 இல் ரூபா 1,686.1 பில்லியனுக்கு 15.9

சதவீத்தினால் அதிகரித்துள்ளது. இதேவேளை 2016 இல் மொத்த வரி வருமானம் ரூபா 1,463.7 பில்லியனுக்கு அதாவது 8.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ள வேளையில் மொத்த வரியில்லாத வருமானம் ரூபா 222.4 பில்லியனுக்கு அதாவது 124.4 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்ட வரி மறுசீரமைப்புக்கள் மொ.உ.உ சதவீதத்தில் வரியல்லாத வருமானத்தினை 2015 இன் 0.9 சதவீதத்திலிருந்து 2016 இல் 1.9 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கு உதவின.

2015 இல் மொ.உ.உற்பத்தியின் 5.4 சதவீதத்திலிருந்து 2016 இல் மொ.உ. உற்பத்தியின் 4.9 சதவீதத்திற்கு மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் வீழ்ச்சியடைந்ததனைத் தொடர்ந்து, 2015 இல் 15.5 சதவீதத்திலிருந்து 2016 இல் மொ.உ. உற்பத்தியின் 14.8 சதவீதத்திற்கு மீண்டெழும் செலவினம் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்தச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் 2015 இன் 20.9 சதவீதத்திலிருந்து 2016 இல் 19.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. பெயரளவு நியதிகளில், மீண்டெழும் செலவினம் 2016 இல் 1,757.8 பில்லியனுக்கு 3.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதற்கு வட்டி கொடுப்பனவுகள் மீதான செலவினம் 2016 இல் ரூபா 610.9 பிலலியனுக்கு 16 சதவீத்தினால் அதிகரித்தமையாகும். ஒப்பீட்டளவில், மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் என்பன 2015 இல் பதிவாக்கிய ரூபா 588.7 பில்லியனோடு ஒப்பிடுகையில் 2016 இல் 576.1 பில்லியனுக்கு 2.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. அத்துடன், ஒட்டுமொத்த வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையும் 2015 இல் பதிவாக்கிய 829.5 பில்லியனோடு ஒப்பிடுகையில் 2016 இல் ரூபா 640.3 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. தேறிய அடிப்படையில், வெளிநாட்டு மூலங்கல் ஊடாக மொத்த நிதியளிப்பில் 67.0 சதவீதம் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைக்காக நிதியளிக்கப்பட்ட அதேவேளை, எஞ்சிய 33.0 சதவீதம் உள்நாட்டு மூலங்கள் மூலம் நிதியளிக்கப்பட்டது. தேறிய வெளிநாட்டு நிதியளிப்பு 2016 இல் ரூபா 429.1 பில்லியனாகக் காணப்பட்டதோடு, தேறிய உள்நாட்டு நிதியளிப்பானது 2016 இல் ரூபா 211.2 பில்லியனாகக் காணப்பட்டது.

வரி அடிப்படையினை விரிவுபடுத்தி அதன் இணங்குதல்களை அதிகரிப்பதற்கான கொள்கைகளைக் கூட்டிணைத்து வரிச் சட்டங்களை இலகுபடுத்தும் வகையில் புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டத்தினை வரைவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொருளாதார சேவைக் கட்டண வீதம் 0.25 சதவீதத்திலிருந்து 0.5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டதன் காரணமாக இலாபமீட்டும் வியாபாரங்களின் வரி அடிப்படையும் விரிவடைந்துள்ளது. நேரடியல்லாத வரிகள் என்ற வகையில், பெறுமதிசேர் வரிமீது பல முன்மொழிவுகள் அமுல்படுத்தப்படவேண்டியுள்ளதோடு பெ.சே.வரி வீதம் 11 சத வீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டு பெ.சே.வரி அடித்தளம் விரிவாக்கப்பட்டது. அச்சிடப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் சூரிய வலுத்தகடுகள் மற்றும் அதன் துணைப் பொருட்கள் என்பன தேசக்கட்டுமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டதோடு தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி வீதமும் 2016 இல் 2.0 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது. மேலும் வாகனங்கள் மீதான பெறுமான வீத அடிப்படையிலான உற்பத்தி வரியானது கன சென்றி மீற்றர் அடிப்படையிலான உற்பத்தித் தீர்வையின் அலகு வீதமொன்றின் மூலம் மாற்றியமைக்கப்பட்டது. அத்துடன் மதுபானம் மற்றும் சிகரெட் நுகர்வினைக் கட்டுப்படுத்தும் வகையில் உற்பத்தி வரியில் காலத்தின் தேவைக்கேற்றவாறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. சட்ட விரோத மதுபான உற்பத்தியினைக் கட்டுப்படுத்தியும் அரசாங்கத்தின் நிலுவை வரிகளைச் சேரிக்கும் வகையிலும் மதுபானம் மற்றும் மதுபானத்தினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் மீது பூல் புறூப் ஸ்டிகர் ஒன்றினை ஒட்டுவதற்கும் முன் மொழியப்பட்டது. விலக்களிப்பு, 15 சதவீதம் மற்றும் 30 சதவீதம் என மூன்று பட்டை தீர்வைக் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டதோடு, துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அளவீடும் 5.0 சதவீதத்திலிருந்து 7.5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டதோடு, தெரிவு செய்யப்பட்ட பொருட்கள்மீது 2.5 சதவீதம் கொண்ட குறைந்த வீதமொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது. செலவினத் தொகையைப் பொறுத்தளவில், அரசாங்க முதலீட்டினை கட்டுப்பாடான மட்டத்தில் பேணும் வகையில் நடைமுறைச் செலவினத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## 2.2அரசாங்க வருமானம்

மொ.உ. உற்பத்தியின் சதவீதமாக அரசாங்க வருமானமானது 2015 இல் பதிவு செய்யப்பட்ட 13.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016 இல் 14.2 சதவீதத்திற்கு 0.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இது 1990 முதல் பதிவாக்கிய வீழ்ச்சிப் போக்கிற்கு மத்தியில் குறிப்பிடதக்க முன்னேற்றமாகக் காணப்பட்டது. மொ.உ. உற்பத்தியின் சதவீதமாக வரி அரசிறையானது 2015 இல் மொ.உ. உற்பத்தியின் 12.4 சதவீதத்தில் மாற்றமின்றிக்காணப்பட்டது எவ்வாறாயினும், மொ.உ. உற்பத்தியின் சதவீதமாக வரியல்லாத அரசிறை வருமானம் 2015 இல் பதிவாகிய 0.9 சதவீதத்திலிருந்து 2016 இல் 1.9 சதவீதத்திற்கு விரிவடைந்துள்ளது. இதற்கு அரசுடைமை வியாபார தொழில் முயற்சிகளிலிருந்தான இலாபங்கள்மற்றும் பங்கிலாபங்களின் மாற்றல்களில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக மொ.உ. உற்பத்தியில் வரியல்லாத வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பே பிரதான காரணமாகும். 2016 இன் ஆண்டுக் காலப்பகுதியில் பெயரளவு நியதிகளில் மொத்த வருமானமானது 2015 இன் ரூபா. 1,454.9 பில்லியனிலிருந்து 2016 இல் ரூபா. 1,686.1 பில்லியனுக்கு 15.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதுடன், வரி வருமானமானது, 2015 இல் ரூபா. 1,355.8 பில்லியனிலிருந்து 2016 இல் ரூபா. 1,463.7 பில்லியனுக்கு 8.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதோடு, வரியில்லா வருமானமானது 2015 இல் ரூபா. 99.1 பில்லியனிலிருந்து 2016 இல் ரூபா 222.4 பில்லியனுக்கு 124.4 சதவீதத்தினால் விரிவடைந்துள்ளது.

### வரி வருமானம்

மொ.உ. உற்பத்தி வீதமாக அரசாங்கத்தின் வரி வருமானம் 2016 இல் 12.4 சதவீதத்தினை பதிவு செய்து மேம்பட்ட நிலையில் நிலையாகக் காணப்பட்டது. உள்நாட்டு நுகர்வினை அடிப்படையாகக் கொண்ட உள்நாட்டுச் செயற்பாடுகள் மீதான பெ.சே.வரி மற்றும் மதுபானம், சிகரெட்டு மீதான வரிகள் போன்ற வரிகளிலிருந்து திரட்டப்பட்ட வருமானம் 2016 இல்,ரூபா 420.0 பில்லியனாக 20.8 சதவீத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளதோடு, இறக்குமதியினை அடிப்படையாகக் கொண்ட இறக்குமதித் தீர்வைகள், இறக்குமதிகள் மீதான பெ.சே. வரி மற்றும் துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு போன்ற வரிகள் ரூபா 738.8 பில்லியனாக 4.9 சதவீதத்தினால் எல்லையளவில் அதிகரித்துள்ளது. இதேவேளை, உழைக்கும்போது செலுத்தும் வரி மற்றும் பொருளாதார சேவைக் கட்டணம் என்பவற்றிலிருந்தான வருமானம் 2016 இல் முறையே 7.5 சதவீதத்தினாலும், 232.8 சதவீதத்தினாலும் அதிகரித்துள்ளது.

### வரியல்லாத வருமானம்

2016 இல் வரியல்லாத வருமானம் ரூபா. 222.4 பில்லியனுக்கு 124.4 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. வங்கித்துறை மற்றும் காப்புறுதி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை போன்ற அரசுடைமை வியாபாரத் தொழில் முயற்சிகளிலிருந்தான அதிகரித்த இலாபம் மற்றும் பங்கிலாபங்களின் மாற்றல்களில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் கட்டணங்கள் மற்றும் அறவீடுகளிலிருந்தான அதிகரித்த வரி வருமானம் என்பன இதற்குப் பங்களிப்புச் செய்துள்ளன.

வரைபு 2.1 : அரசாங்க வருமானம்




**அட்டவணை 1 : அரசாங்க வருமானத்தின் மாறல் பகுப்பாய்வு – 2016 (ரூபா. மில்)**

| விடயம் | 2015 | 2016 மதிப்பீடு | 2016 தற்காலிக | காரணம் |
|---|---|---|---|---|
| வருமான வரி | **262.6** | **236.0** | **258.8** | 2015 ஆம் ஆண்டின் வருமான வரி வருநானமானது ஒற்றை வரியான அதியீட்டு வரியின் ரூபா.49.8 பில்லியனையும் கொண்டுள்ளது. அதியீட்டு வரி வருமானத்தினை நீக்கிப் பார்க்கும் போது வருமான வரி வருமானமானது 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் 21.7 சதவீத வளர்ச்சியைப் பதிவாக்கியுள்ளது. இவ்வளர்ச்சிக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் RAMIS கருத்திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டதே பிரதான காரணமாகும். பொருளாதார சேவைக் கட்டண வரி விகிதத்தினை 0.25 சதவீதத்திலிருந்து 0.5 சதவீதத்திற்கு அதிகரித்தமை, இலாபமீட்டு கமபனிகளுக்கு வழங்கப்பட்ட விலக்களிப்பு நீக்கப்பட்டு வரி அடிப்படை வரிவாக்கப்பட்டமை என்பன காரணமாக பொ.சே.கட்டணத்திலிருந்தான வருமான வரியும் கணிசமாக அதிகரித்துள்ளது. |
| பெறுமதிசேர் வரி | **219.7** | **315.0** | **283.5** | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் RAMIS கருத்திட்டம் வினைத்திறன்மிக்கவகையில் செயற்படுத்தப்பட்டதன் காரணமாக 2016 இல் பெ.சே.வரி வருமானத்தில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. பெ.சே.வரி வீதத்தினை 11 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கும், வரிப் பதிவு முதல்நிலையினை ஆண்டொன்றுக்கு ரூபா.15 மில்லியனிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூபா. 12 மில்லியனுக்கு குறைப்பதற்கும், சுகாதார சேவைகள், தொலைத்தொடர்பு சேவைகள் மற்றும் சிகரெட்டு, புகையிலை உற்பத்திகள் மீதான விலக்களிப்புக்களை நீக்குவதற்கும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியான நடவடிக்கைகள் மேலும் இதற்கு உதவின. |
| உற்பத்தி வரி | **497.6** | **444.0** | **454.9** | மோட்டர் வாகனங்களிலிருந்தான உற்பத்தி வரி வருமானம் 29.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக, 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உற்பத்தி வரி வருமானமும் 8.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. எனினும், குறிப்பட்ட காலப்பகுதியில் மதுபானம்,சிகரெட்டு, மற்றும் பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான உற்பத்தி வரி வருமானம் முறையே 14.3சதவீதம், 11.0 சதவீதம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | மற்றும் 23.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. வரி விகித திருத்தம் மற்றும் தொகுதி அதிகரிப்பு என்பன இந்த வருமான அதிகிப்பிற்கு பங்களிப்புச் செய்துள்ளன. |
| இறக்குமதித் தீர்வை. | **132.2** | **135.0** | **156.5** | இறக்குமதித் தீர்வையின் மேல் நோக்கிய திருத்தம், 2016 இன் மீளாய்வின் போது தீர்வைக் கட்டமைப்புக்கள் இலகுபடுத்தப்பட்டமை மற்றும் ஆண்டில் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன இவ்வளர்ச்சிக்கு பிரதான பங்களிப்புச் செய்துள்ளன. |
| துறைமுகங்கள், விமான நிலைய அபிவிருத்தி அறவீடு. | **68,646** | **55,000** | **58,644** | து.வி.அ.அறவீட்டினை 5% இலிருந்து 7.5% என்ற நியம விகிதத்திற்கு அதிகரிப்பதற்காக எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான நடவடிக்கைகள் மற்றும் 2016.01.01 முதல் பயன்வலுப் அபறும் வகையில் தெரிவு செய்யப்பட்ட சில பொருட்கள் மீதான மட்டுப்படுத்தப்பட்ட சலுகை வீகிதம் என்பன இந்த வருமான அதிகரிப்பிற்கு பங்களிப்புச் செய்துள்ளன. |
| தேசக் கட்டுமான வரி | **45.0** | **54.0** | **57.4** | தே.க.வரி முதல்நிலையினை காலாண்டொன்றுக்கு ரூபா.3.75 மில்லியனிலிருந்து காலாண்டொன்றுக்கு ரூபா.3.0 மில்லியனுக்கு குறைக்கப்பட்டதன் காரணமாக தே.க.வரி அடிப்படை வரிவடைந்தமை, ஹோட்டல்கள் வாடிவீடுகள் மற்றும் உணவகங்களுடன் ஏற்புடையதான காலாண்டொன்றுக்கு ரூபா.25 மில்லியன் என்ற முதல்நிலை நீக்கப்பட்டமை என்பன இவ்வதிகரிப்பிற்கு பங்களிப்புச் செய்துள்ளன. உள்நாட்டு மற்றும் வரி விதிப்பனவுச் செயற்பாடுகளோடு தொடர்புபற்ற இறக்குமதி என்பனவற்றில் ஏற்பட்ட மேம்பாட்டுகளினால் மேலும் இது உறுதுணையளிக்கப்பட்டுள்ளது. |
| ஏனைய வரிகள் | **140.1** | **156.0** | **163.8** | விசேட வியாபாரப் பண்ட அறவீட்டின் கீழ் வரும் பண்டங்களின் எண்ணிக்கையினை அதிகரித்தமை மற்றும் வி.வி.ப.அறவீட்டு விகித திருத்தம் என்பனவற்றோடு இணைந்த வகையில் தைக்கப்பட்ட ஆடைகள் மற்றும் பாதணிகள் மீதான செஸ்வரி அதிகரிக்கப்பட்டமை என்பன வருமான அதிகரிப்பிற்கு வழிவகுத்துள்ளது.அத்துடன், சர்வதேச தொலைத்தொடர்பு அறவீட்டு விகிதத்தினை நிமிடமொன்றுக்கு ஐ.அ.டொ.9 சதத்திலிருந்து நிமிடமொன்றுக்கு ஐ.அ.டொ.12 சதத்திற்கு அதிகரித்தமையும் இத்தகைய வருமான அதிகரிப்பிற்கு பங்களிப்புச் செய்துள்ளன. |
| வரியல்லாத வருமானம் | **99.1** | **144.0** | **222.4** | அரசதுறைப் பணியாளர்களது அடிப்படைச் சம்பளம் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக சமூகப் பாதுகாப்பு பங்பளிப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் அரசுடைமை வியபார தொழில் முயற்சிகளின் இலாப மற்றும் பங்கிலாப கொடுப்பனவில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன வருமான அதிகரிப்பிற்கு சாதகமான பங்களிப்பினை வழங்கியது. கடல் மற்றும் ஆகாய வழி விமானமேறல் வரியினை ஐ.அ.டொ.30 இற்கு அதிகரிப்பதற்கும், கடவுச் சீட்டு மற்றும் வீசா கட்டணங்கள் என்பனவற்றினை அதிகரிப்பதற்கும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியான நடவடிக்கைகள் விற்பனைகள் மற்றும் அறவீடுகளிலிருந்தான வருமானம் அதிகரிப்பதற்கும் உதவின. |
| **மொத்தம்** | **1,454.9** | **1,576.0** | **1,686.1** | |

## 3. செயலாற்றுகை2016

**3.1 வருமானம் சேகரிப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள சகல திணைக்களங்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடல்.**

பொருளாதார பகுப்பாய்வுகளின் அடிப்படையில்,ஆண்டுக் காலப்பகுதியில் பெயரளவு நியதிகளில் மொத்த வருமானமானது 2015 இன் ரூபா. 1,454.9 பில்லியனிலிருந்து 2016 இல் ரூபா. 1,686.1 பில்லியனுக்கு 15.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதுடன்,மொத்த அரசாங்க வரி வருமானத்தில்,வரி வருமானமானது, 2016 இல் ரூபா. 1,463.7 பில்லியனாக காணப்பட்டதோடு,வரியில்லாத வருமானமானது ரூபா 222.3 பில்லியனுக்கு விரிவடைந்துள்ளது.

**வரைபு 2 : வருமான வரி வகுதி - 2016**



## 3.2. அரசாங்க வருமானப் பொழிப்பு

**அட்டவணை:2:அரசாங்க வருமானம்(ரூபா. மில்)**

| விடயம் | 2015 | 2016 (தற்காலிகமானது) |
|---|---|---|
| **வரி வருமானம்** | **1,355,779** | **1,463,689** |
| வருமான வரி | 262,583 | 258,857 |
| பெ.சே.வரி | 219,700 | 283,470 |
| தே.க.வரி | 45,004 | 57,424 |
| உற்பத்தி வரி | 497,623 | 454,952 |
| இறக்குமதித் தீர்வைகள் | 132,189 | 156,487 |
| து.வி.நி.அ.அறவீடு | 58,644 | 88,823 |
| விசேட வியாபாரப்ப பண்ட அறவீடு | 52,276 | 55,825 |
| ஏனையவை | 87,760 | 107,851 |
| **வரியல்லா வருமானம்** | **99,099** | **222,372** |
| வட்டி/வாடகை | 7,321 | 15,806 |
| இலாபம் மற்றும் பங்கிலாபம் | 29,798 | 108,160 |
| விற்பனைகள் மற்றும் அறவீடுகள் | 44,632 | 72,606 |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு | 15,213 | 18,046 |
| மத்திய வங்கி இலாப மாற்றல்கள் | - | 5,000 |
| ஏனையவை | 2,135 | 2,754 |
| **மொத்த வருமானம்** | **1,454,878** | **1,686,061** |

## 3.3 அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் அமுல்படுத்தப்பட்ட கொள்கை மாற்றங்களுக்கேற்ப வரி தொடர்பான சட்ட ஏற்பாடுகளைத் திருத்துதல்.

அரசிறைத் திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் பின்வருமாறு.

**I. உற்பத்தி வரி(விசேட ஏற்பாடுகள்) சட்டம்:**

- **1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2016.01.12 ஆந் திகதிய 1949/29ஆம் வர்த்தமானி அறிவித்தல்)**
  - 2015.11.20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் திறக்கப்பட்ட நாணயக் கடிதத்தினைக் கொண்டு தனிப்பட்ட பாவனைக்காக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்கு, .2015.02.26 ஆந் திகதிய 1903/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்ட தீர்வை வீதங்களில் சலுகையினை வழங்குவதற்காக

- **1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் ( 2016.04.29ஆந் திகதிய 1964/70 ஆம் வர்த்தமானி அறிவித்தல்)**
  - பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரினால்,இலங்கை வெளிநாட்டு துாதுவராண்மை சேவையிலுள்ள இராஜதந்திர அலுவலரினால் அல்லது மாகாண சபை உறுப்பினர் ஒருவரினால் சலுகை அனுமதிப்பத்திரத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்காக வாகனங்களுக்கு சில நிபந்தனைகளுடன் கூடிய உற்பத்தித் தீர்வை சலுகைகளை வழங்குவதற்காக
- **1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் ( 2016.05.02 ஆந் திகதிய 1965/2 ஆம் வர்த்தமானி அறிவித்தல்)**
  - 8 ஆவது பாராளுமன்ற உறுப்பினர்களின் வாகன இறக்குமதிக்கு வரி விலக்களிப்புக்களை வழங்குவதற்காக
- **1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் ( 2016.05.16 ஆந் திகதிய 1967/5 ஆம் வர்த்தமானி அறிவித்தல்)**
  - இலங்கை ஜனாதிபதி அல்லது பிரதமரின் உத்தியோகபூர்வ பயன்பாட்டுக்காக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் / பொருட்களுக்கு வரி விலக்களிப்புக்களை வழங்குவதற்காக
- **1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் ( 2016.05.19 ஆந் திகதிய 1967/52 ஆம் வர்த்தமானி அறிவித்தல்)**
  - நாட்டுக்கு அளப்பரிய சேவையாற்றிய அல்லது விருது வழங்கப்பட்ட நபர்களுக்கு சலுகை அனுமதிப்பத்திரத்தின் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்காக கீழ் சில நிபந்தனைகளின் அடிப்படையில் உற்பத்தித் தீர்வை சலுகைகள் வழங்குவதற்காக
- **1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் ( 2016.05.26 ஆந் திகதிய 1968/19 ஆம் வர்த்தமானி அறிவித்தல்)**
  - இயந்திரத்தின் மோட்டர் சக்தியின் கிலோவோட்டினை அடிப்படையாகக் கொண்ட, மின்சார வாகனங்கள் மீதும் உற்பத்தி வரியும்அறிமுகப்படுத்துவதற்காகவும் மோட்டார் வாகனங்களின் அலகுவிகிதங்களை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி வரியினைத் திருத்தியமைப்பதற்காகவும்
- **1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் ( 2016.08.20 ஆந் திகதிய 1980/41 ஆம் வர்த்தமானி அறிவித்தல்)**
  - எரிவாயு எண்ணெய்/டீசல் மீதான உற்பத்தி வரி விகிதமானது லீற்றர் ஒன்றுக்கு ரூபா.3/- இலிருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூபா.13/- வரை அதிகரிப்பதற்காக
- **1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் ( 2016.08.19 ஆந் திகதிய 1980/42 ஆம் வர்த்தமானி அறிவித்தல்)**
  - அரச பணி ஊழியர்களுக்காக வழங்கப்பட்ட சலுகை அனுமதிப்பத்திரம் ஒன்றினைக் கொண்டு இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்நாட்டில் பொருத்தப்பட்ட வாகனமொன்றினை கொள்வனவு செய்வதற்காக உற்பத்தித் தீர்வை சலுகைகளை வழங்குவதற்காக
- **1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் ( 2016.10.03 ஆந் திகதிய 1987/08 ஆம் வர்த்தமானி அறிவித்தல்)**
  - சிகரெட் மீதான உற்பத்தி வரியினைத் திருத்தியமைப்பதற்காக

- **1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் ( 2016.11.10 ஆந் திகதிய 1992/29 ஆம் வர்த்தமானி அறிவித்தல்)**
  - மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தி தீர்வை விகிதங்களைத் திருத்தியமைப்பதற்காகவும் மோட்டார் சைக்கில்கள் மீது அலகு விகித அடிப்படையில் உற்பத்தி வரியினை அறிமுகப்படுத்துவதற்காகவும்
  - குவளையில் அடைக்கப்பட்ட பியருக்கு உற்பத்தித் தீர்வையினை விதிப்பதற்ககவும்
- **1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் ( 2016.11.30 ஆந் திகதிய 1995/17 ஆம் வர்த்தமானி அறிவித்தல்)**
  - லொத்தர்கள் மீது உற்பத்தி விரியினை விதிப்பதற்காக
- **1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் ( 2016.11.10 ஆந் திகதிய 1992/30 ஆம் வர்த்தமானி அறிவித்தல்)**
  - மாகாண சபை ஆளுநர்களுக்காக இறக்குமதிசெய்யப்பட்ட வாகனங்களுக்கு வரி விலக்களிப்பினை வழங்குவதற்காக.
- **1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் ( 2016.12.06 ஆந் திகதிய 1996/10 ஆம் வர்த்தமானி அறிவித்தல்)**
  - கூடாரங்கள் மற்றும் இயந்திரத்துடன் கூடிய நான்கு வருடங்களுக்கு குறைந்த அடிச்சட்டகம் பொருத்தப்பட்ட வாகனங்கள் மீது உற்பத்தி வரியினை விதிப்பதற்காக

**II. மதுவரி கட்டளைச் சட்டம்**

- **மதுவரி அறிவித்தல் இலக்கம் 988 (2016.03.02 ஆம் திகதிய 1956/19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - எத்தனோல் மதுசாரம் மீதான மதுவரி திருத்தியமைப்பத்காக
- **மதுவரி அறிவித்தல் இலக்கம் 989 (2016.08.26 ஆந் திகதிய 1981/87 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**

  வெளிநாட்டு மதுபானம் மீது கீழ் வருமாறு மதுவரியினைஅமுல்படுத்துவதற்காக,
  - மாவுறல் மதுபானம்தொ.லீற். ஒன்றுக்கு ரூபா.50.00
  - வெளிநாட்டு வைன்தொ.லீற். ஒன்றுக்கு ரூபா.100.00
  - ஏனைய வெளிநாட்டு மதுபானம் தொ.லீற். ஒன்றுக்கு ரூபா.200.00
- **மதுவரி அறிவித்தல் இலக்கம் 990 (2016.10.03 ஆந் திகதிய 1987/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - மீள் ஏற்றுமதி அல்லது வரித் தீர்வைகளற்ற கடைகளில் விற்பனை செய்வதற்காக இறக்குமதிசெய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானம் மீது 2016.08.26 ஆந் திகதிய 1981/87 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்ட உற்பத்தி வரி விலக்களிக்களிப்பதற்காக
- **மதுவரி அறிவித்தல் இலக்கம் 991 (2016.12.09 ஆந் திகதிய 1996/52 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - எதனோல் மதுசாரத்தினை களஞ்சியப்படுத்தல் அல்லது நகர்த்தலின் போது ஏற்படும் சிந்துதல் அல்லது ஆவியாதல் என்பவற்றால் ஏற்படுகின்ற இழப்பிற்கான கொடுப்பனவுகளைக் குறைப்பதற்காக

- **மதுவரி அறிவித்தல் இலக்கம் 992 (2016.12.15 ஆந் திகதிய 1997/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - வருடாந்த மதுவரி உரிமக் கட்டணங்களைத் திருத்தியமைப்பதற்காக
- **மதுவரி அறிவித்தல் இலக்கம் 993 (2016.12.20 ஆந் திகதிய 1998/6 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - போத்தில் அடைக்கப்பட்ட கள்ளு மீதான உற்பத்தித் தீர்வையினை லீற்றர் ஒன்றுக்கு ரூபா.30 இலிருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூபா.50 வரை அதிகரிப்பதற்காக
- **மதுவரி அறிவித்தல் இலக்கம் 994 (2016.12.20 ஆந் திகதிய 1998/7 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - வெளிநாட்டு மதுபான உரிமப் பத்திரமொன்றுடன் சேர்த்து வழங்கப்படுகின்ற சாராய உரிமப் பத்திரங்களுக்காக ரூபா.100,000 ஐயும் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளினை விற்பனை செய்வதற்காக ரூபா.50,000 ஐயும் உரிமக் கட்டணமாக அறவிடுவதற்காக

**III. முத்திரை வரி (விசேட ஏற்பாடுகள் ) சட்டம்**

- **2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2016.01.01 ஆந் திகதிய 1947/45 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - கடன் அட்டைகளைப் பயன்படுத்தப்பட்ட வெளிநாட்டுக் கொள்வனவு மீதான முத்திரைத் தீர்வை 2.5 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்காக
- **2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2016.01.01 ஆந் திகதிய 1947/46 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - கடன் அட்டைகளைப் பயன்படுத்தி உள்நாட்டுக் கொள்வனவின் போதான முத்திரை தீர்வையினை நீக்குவதற்காக
  - பங்குச் சான்றிதழ்தளை வெளியிடும் போதான முத்திரைத் தீர்வையினை நீக்குவதற்காக

**IV. துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு**

- **2016 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டம்**
  - துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டினை 5% இலிருந்து 7.5% வரை அதிகரிப்பதற்காக
- **2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு (2016.01.01 ஆந் திகதிய 1947/47 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்**
  - மின்னியல் மற்றும் மின்சாரப் பொருட்கள் மீது 2.5 சதவீத சலுகை விகிதத்தினை விரிவுபடுத்துவதற்காக
  - விவசாயம், பாற்பண்ணை மற்றும் நிர்மாணக் கைத்தொழில் என்பவற்றிற்காக பயன்படுத்தப்பட்ட தெரிவுசெய்யப்ப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்கு விலக்களிப்பதற்காக
- **2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு (2016.11.11 ஆந் திகதிய 1942/51ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்**
  - அச்சிடப்பட்ட புத்தகங்கள், சஞ்சிகைகள், செய்தித் தாள்கள் தவிர்ந்த நாளேடுகள் என்பனவற்றிற்கு விலக்களிப்பதற்காக
  - மருந்து உற்பத்திக் கைத்தொழிலோடு தொடர்புபற்ற இ.மு.கு.இ 3926.90.80,9602.00.10 கீழான மூலப்பொருட்களுக்கு 2.5% சலுகை விகிதத்தில் து.வி.நி.அ. இனை விதிப்பதற்காக

## V. செஸ் வரி

- **1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் (2016.06.13 ஆந் திகதிய 1971/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - இயற்கை இறப்பர் மீதான ஏற்றுமதி செஸ் வரியானது கி.ஒன்றுக்கு ரூபா.15 இலிருந்து கி.ஒன்றுக்கு ரூபா. 4 இற்கு திருத்தியமைப்பதற்காக
- **1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் (2016.06.13 ஆந் திகதிய 1971/6 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**

  மாட்டிறைச்சி வான்கோழி மற்றும் செம்மறியாட்டிறைச்சி என்பன இறக்குமதி செய்யப்படும் போது இறக்குமதி செஸ் அறவீட்டினை 30% அல்லது கி.ஒன்றுக்கு ரூபா. 225 இலிருந்து 15% இற்கு அல்லது கி.ஒன்றுக்கு ரூபா.100 இற்கு திருத்தியமைப்பதற்காக
- **1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் (2016.06.28 ஆந் திகதிய 1973/21 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - காற்றூட்டப்பட்ட குடிபானங்கள் இறக்குமதியின் போதான் வரி விகிதங்களைத் திருத்தியமைப்பதற்காக
- **1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் (2016.06.28 ஆந் திகதிய 1975/40 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - பீடி இலைகள் இறக்குமதியின் போதான செஸ் விகிதங்கள் திருத்தமைப்பதற்காக
- **1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் (2016.08.24 ஆந் திகதிய 1981/32 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - காற்றூட்டப்பட்ட குடிபானங்கள் இறக்குமதியின் போதான செஸ் விகிதங்கள் திருத்தமைப்பதற்காக
- **1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் (2016.11.12 ஆந் திகதிய 1992/52 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - முன்பொருத்தப்பட்ட கட்டடங்கள், பன்றிக் கொழுப்புகள், குவளையில் அடைக்கப்பட்ட வெல்லப்பாகு, சூரிய காந்தி விதைகள் மற்றும் கொழுப்பகற்றப்பட்ட தேங்காய் துருவல்கள் உள்ளடங்கலாக தெரிவு செய்யப்பட்ட நூறு பொருட்கள் மீது இறக்குமதி செஸ் வரியினை நீக்குவதற்காக

## VI. பொருளாதார சேவைக் கட்டணம்

- **2017இன் 7 ஆம் இலக்க பொருளாதார சேவை கட்டணம்(திருத்தச்) சட்டம்**
  - பொ.சே.கட்டணத்தினை 0.25 சதவீதத்திலிருந்து 0.5 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்காக
  - ஆண்டொன்றுக்கு ரூபா.120 மில்லியன் என்ற உயர்ந்தபட்ச பொறுப்புடமையினை நீக்குவதற்காக
  - இலாபமீட்டும் வியபாரங்களுக்கான விலக்களிப்பு நீக்குவதற்காக
  - இ.மு. குறியீட்டு இலக்கம் 7106, 7108, 7110, 7118.90.10 என்பனவற்றின் கீழ் தங்கம் மற்றும் ஏனைய விலையுயர்ந்த உலோகங்கள் இறக்குமதியின் போதும் பொ.சே.க விதிப்பதற்காக

## VII. நிதிச் சட்டம்

- **2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம்(2016.01.01 ஆந் திகதிய 1947/48 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்**
  - கப்பல் மற்றும் விமான பயணிகளுக்கு ஐ.அ.டொ 30 வரை விமானமேறல் அல்லது கப்பலேறல் ஏறல் அறவீட்டினை அதிகரிப்பதற்காக

## VIII. பெறுமதிசேர் வரி

- **2016 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க பெறுமதி சேர்வரி (திருத்தச்) சட்டம்**
  - பெறுமதி சேர் வரி விகிதமானது 11 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்காக
  - பே.சே.வ பதிவு செய்வதற்கான முதல்நிலையினை காலாண்டொன்றுக்கு ரூபா 3 மில்லியனுக்கு அல்லது ஆண்டொன்றுக்கு ரூப ா12 மில்லியனுக்கு திருத்தியமைப்பதற்காக
  - தொலைத் தொடர்பாடல் சேவைகள் வழங்கல்,தொலைத் தொடர்பு உபகரணங்கள் அல்லது சாதனங்கள் என்பனவற்றினை வழங்கல் அல்லது இறக்குமதி செய்தல், தொலைத் தொடர்பு கைத்தொழிலுக்கான செம்புக் கம்பிகள் உள்ளடங்கலாக உயர் தொழில்நுட்ப சாதனங்கள், தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் முகவர் நிறுவனத்தினால் உள்ளூர் தொலைத் தொடர்பு இயக்குநர்களுக்கு உரிமம் வழங்கல், சுகாதார பராமரிப்புச் சேவைகளை வழங்கல் என்பனவற்றின் மீது பெறுமதி சேர் வரிக்கு உட்படுத்துவதற்காக
  - சீனி அல்லது ஏனைய சுவையூட்டிகள் சேர்க்கப்பட்டுள்ள உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது இறக்குமதிசெய்யப்பட்ட பால்மா மீதும் பெ.சே.வ விதிப்பதற்காக
  - மதுபானம், சிகரெட்டு, நிலக்கரி, வாசனைத் திரவியங்கள்,மின்சார மற்றும் மின்னணுப் பொருட்கள் மற்றும் தொாலைத்தொடர்பு உபகரணங்கள் என்பனவற்றின் மீதும் பெ.சே.வ விதிப்பதற்காக
- **2016 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க பெறுமதி சேர்வரி (திருத்தச்) சட்டம் (2016.11.11 ஆந் திகதிய 1991/17 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்**
  - மருத்துவத் தொழிலர், மருத்துவ ஆலோசனைக் கட்டணம், சனலிங் கட்டணம், மருத்துவமனை அறைக் கட்டணங்கள் என்பனவற்றிற்காக செலுத்தப்பட்ட கட்டணங்கள் தவிர்ந்த ஏனைய சுகாதாரப் பராமரிப்புகுச் சேவைக் செலவினங்களுக்கு விலக்களிப்பதற்காக
  - புதுப்பிக்கப்படதற்பாலதான மின்வலுத் தோற்றுவிப்புக்கான பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது துணையுறுப்புக்கள் செய்தித்தாள்கள் தவிர்ந் புத்தகங்கள், மாதவெளியீடுகள், சஞ்சிகைகள் அல்லது பருவளியீடுகள், மருத்துவ எந்திரத் தொகுதி அல்லது மருத்துவ சாதனங்கள் மற்றும் சில மின் பொருட்களுக்கு விலக்களிப்பதற்காக

## IX. தேச கட்டுமான வரி

- **2016ஆம் அண்டின் 22ஆம் இலக்க தேச கட்டுமான வரி (திருத்தச்) சட்டம்**
  - தேசகட்டுமான முதல்நிலைப் பதிவானது காலாண்டு ஒன்றுக்கு ரூபா.3.75 மில்லியனிலிருந்து காலாண்டு ஒன்றுக்கு ரூபா. 3 வரை குறைப்பதற்காக

- தொலைத் தொடர்பு சேவைகள், மின்வழங்கல், உராய்வு நீக்கிகள், வீடமைப்பு கருத்திட்டமல்லாத ஏதேனும் குறிப்பீடு செய்யப்பட்ட கருத்திட்டங்கள் குறிப்பாக,பொருட்கள் அல்லது சேவைகள் மீது தற்போது பயன்பாட்டிலுள்ள தே.க.வ விலக்களிப்புக்களை நீக்குவதற்காக

**X. 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டம்**

அ. 2003 ஆம் ஆண்டின் 03ம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான கட்டளை ( 2016.07.08 ஆந் திகதிய 1974/27 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)

- அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை - 2016 இனை வெளியிடுவதற்காக.

ஆ. 2003 ஆம் ஆண்டின் 03ம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழான கட்டளை (2016.06.21 ஆந் திகதிய 1972/8 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)

- இறுதி வரவு செலவுத் திட்ட நிலைமை அறிக்கை (ஆண்டறிக்கை) -2015 இனை வெளியிடுவதற்காக

இ. 2003ன் 03ம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 4 ஆம் மற்றும் 7 ஆம் பிரிவின் கீழான கட்டளை (2016.11.10 ஆந் திகதிய 1992/31 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)

- அரசிறை முகாமைத்துவ அறிக்கை – 2017 இனை வெளியிடுவதற்காக.

## 3.4. 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் அறிக்கைகளை வெளியிடுதல்

- **ஆண்டறிக்கை– 2015**

  குறித்த நிதியாண்டு முடிவடைந்து 5 மாத காலம் கழிவதற்கு முன்பு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து பொதுமக்களுக்கு வெளியிடப்பட வேண்டிய இறுதி வரவு செலவுத் திட்ட நிலைமை அறிக்கை, அதாவது 2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை 2016 மே மாதத்தில் வெளியிடப்பட்டது.

- **அரையாண்டு அரசிறை நிலைமை குறித்த அறிக்கை – 2016**

  குறித்த ஆண்டின் யூன் மாதத்தின் இறுதித் தினத்தன்று அல்லது ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 6 மாதம் கழிவதற்கு முன்பு ஆகிய இரு காலப் பிரிவுகளின் பின்னர் வரும் நாளுக்கு முன்பதாக ஆண்டு தோறும் வெளியிடப்பட வேண்டும் என்பதுடன், 2015 ஆம் ஆண்டின் அரையாண்டு அரசிறை நிலைமை குறித்த அறிக்கை 2016யூன் மாதத்தில் வெளியிடப்பட்டது.

- **அரசிறை முகாமைத்துவ அறிக்கை - 2017**

  2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 4, 5 மற்றும் 6 ஆவது பிரிவுகளின் கீழ் சமர்ப்பிக்கப்படுகின்ற அரசிறை முலோபாய அறிக்கை 2016 உம், 7, 8 மற்றும் 9 ஆம் பிரிவுகளின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வரவு செலவுத் திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை தொடர்பிலான அறிக்கைகள் 2016இரண்டையும் உள்ளடக்கிய அரசிறை முகாமைத்துவ அறிக்கையானது 2016ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில் வெளியிடப்பட்டது.

## 4. நிர்வாகம் மற்றும் கணக்குகள்

### 4.1 நிறுவனக் கட்டமைப்பு

அரசிறைக் கொள்கைத் திணைக்களம் 60 அனுமதிக்கப்பட்ட பதவியணியினரைக் கொண்டுள்ளது. அதற்கமைய, பின்வரும் அலுவலர்கள் இத்திணைக்களத்தில் பணியாற்றுகின்றனர்.

**அட்டவணை : 3பதவியணி பற்றிய விபரம் -2016 (2016.12.31அன்றுள்ளவாறு)**

| புதவி | அனுமதிக்கப்பட்ட பதவியணி | தற்போதைய பதவியணி | பதவி வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் - இ.நி.சே | 01 | 01 | - |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் -இ.நி.சே. | 01 | - | 01 |
| பணிப்பாளர்கள் இ.நி.சே. | 02 | - | 02 |
| இ.தி.சே | 01 | 01 | - |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர்-இ.நி.சே. | 09 | 06 | 03 |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர்-இ.தி.சே | 05 | 05 | - |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர்-இ.க.சே. | 01 | 01 | - |
| நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 01 | - |
| மொழி பெயர்ப்பாளர் | 02 | 01 | 01 |
| அபிவிருத்தி உதவியாளர் | 10 | 05+04* | 01 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 13 | 11 | 02 |
| சாரதிகள் | 05 | 03 | 02 |
| அலுவலக உதவியாளர் | 09 | 08 | 01 |
| **மொத்தம்** | **60** | **43+04*** | **13** |

** பயிலுநர் பட்டதாரிகள்*

### 4.2. மனிதவள அபிவிருத்தி

#### 4.2.1உள்நாட்டுப் பயிற்சிகள்

**அட்டவணை:4 உள்நாட்டுப் பயிற்சிகள் - 2016**

| பெயர் | பதவி | நிறுவகம் &நிகழ்ச்சித் திட்டம் | பயிற்சிக் காலம் |
|---|---|---|---|
| கலாநிதி. கபில சேனாநாயக்க | பணிப்பாளர் | Training Program on Enhancing Audit Quality | 2016.11.29 |
| திருமதி. எம்.ஏ.சதுரி.என். செனெவிரத்ன. | உதவிப் பணிப்பாளர் | Capacity Building Programs for Public Sector Officers | 21-25 நொவெம்பர் - 2016 |
| | | Preperation of PAYEE/VAT Schedules – Path to RAMIS Workshop | 09.02.2016 |
| திருமதி.டி.ஜி.என்.குமாரி | உதவிப் பணிப்பாளர் | Introductory Course on Macro Economic Dynamics and Linkages | 2016.06.16. முதல் 2016.07.05 வரை |
| | | AAT Sri Lanka Conference - 2016 | 2016.11.02 |

| | | | |
|---|---|---|---|
| செல்வி.எச்.டி.ஏ.றுக்ஷிணி | உதவிப் பணிப்பாளர் | Preperation of PAYEE/VAT Schedules – Path to RAMIS Workshop | 2016.02.09 |
| திருமதி.எல்.டி.யூ.எம்.சொய்ஸா | உதவிப் பணிப்பாளா | Applied Econometrics Practical Approach Using E-Views Software | 2016.01.20 முதல் 2016.05.25 வரை |
| செல்வி சதுரிகா ராஜகருண | உதவிப் பணிப்பாளர் | Preperation of PAYEE/VAT Schedules – Path to RAMIS Workshop | 2016.02.09 |
| திருமதி.பி.எஸ்.ஜயசுந்தர | அபிவிருத்தி உத்தியோகத்தர் | Applied Econometrics Practical Approach Using E-Views Software | 2016.01.20 முதல் 2016.05.25 வரை |
| | | Preperation of PAYEE/VAT Schedules – Path to RAMIS Workshop | 2016.02.09 |
| திருமதி.பி.கே.எஸ்.ரோஷிணி | அபிவிருத்தி உதவியாளர் | ஆவண முகாமை மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஐந்து நாள் பயிற்சிப் பட்டறை | 2016.02.08 முதல் 2016.02.12 வரை |
| திரு.டி.எம்.கே.ஜே.கே.எம். ஏகநாயக்க | திட்டமிடல் உதவியாளர் | Preperation of PAYEE/VAT Schedules – Path to RAMIS Workshop | 2016.02.09 |
| திருமதி.வை.என்.சி.டி. சில்வா | அபிவிருத்தி உதவியாளர் | ஆவண முகாமை மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஐந்து நாள் பயிற்சிப் பட்டறை | 2016.06.20 முதல் 2016.06.24 வரை |
| திருமதி.டப்.என்.டி. சில்வா | அரச முகாமைத்துவ உதவியாளர் | Financial Regulations in the Public Sector | 2016.11.21 முதல் 2016.11.22 வரை |
| திருமதி.டி.பி.ஆரியதிலக | அரச முகாமைத்துவ உதவியாளர் | File Management , General Office Administration & Ecode | 2016.11.21 முதல் 2016.11.22 வரை |
| திருமதி.என்.ஏ.சுவர்ணலதா. | அரச முகாமைத்துவ உதவியாளர் | Financial Regulations in the Public Sector | 2016.11.21 முதல் 2016.11.22 வரை |
| திருமதி.வி.கே.டப்.வசந்தா ரமணி | அரச முகாமைத்துவ உதவியாளர் | Financial Regulations in the Public Sector | 2016.11.21 முதல் 2016.11.22 வரை |
| செல்வி.எம்.ஜீ.ஆர்.எஸ்.தனபால | அரச முகாமைத்துவ உதவியாளர் | File Management , General Office Administration & Ecode | 2016.11.21 முதல் 2016.11.23 வரை |

### 4.2.2வெளிநாட்டுப் பயிற்சிகள்/ பற்றரைகள்

அட்டவணை : 5வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் மாநாடுகள்

| பெயர் | பதவி | நிறுவகம் &நிகழ்ச்சித் திட்டம் | பயிற்சிக் காலம் |
|---|---|---|---|
| திரு.ஏ.கே.செனெவிரத்ன | பணிப்பாளர் நாயகம் | Capacity building seminar on Integrated Macroeconomic Statics & the balance sheet approach for better Economic decision making- Cambodia | 20-23ஜனவரி2016 |
| | | Investor's Meeting- USA | 17-26ஏப்ரல்2016 |
| | | $92^{nd}$ Session of Committee on Fiscal Affairs-Japan | 29 யூன் 2016முதல் 02 யூலை 2016 வரை |
| | | Executive Program in Public Finance Management /Government Debt. Management for senior officials. -Japan | 23யூலை 2016முதல் 06ஓகத்து 2016 வரை |
| | | TDAT training in Dhaka - Bangladesh | 11 – 16 திசெம்பர் 2016 |
| கலாநிதி.எம்.கே.சீ.சேனாநாயக | பணிப்பாளார் | Seminar for tax statics system for developing countries. | 17 ஓகத்துமுதல் 19 செத்தெம்பர் 2016 வரை |
| திருமதி.டப்.டி.ஏ.பேரேரா | வரி ஆலோசகர் | Seminar on Tax administration & Taxpayer services for Developing Countries. - China | 25 மே 2016முதல் 17 யூன் 2016 வரை |
| | | Proposed Negotiations for the Revision of the Agreement for Avoidance of Double Taxation between Sri Lanka & Switzerland. – | 12– 18 திசெம்பர் 2016 |
| திரு.ஆர்.எம்.ஆர்.எஸ்.பி. திஸாநாயக்க | உதவிப் பணிப்பாளா | Knowledge sharing Programme - Korea | 03-09 ஏப்ரல் 2016 |
| | | Business & Technology meeting for Tax Systems.- China | 19-21 ஒற்றோபர் 2016 |
| திரு.கே.கே.ஐ. எரணந்த | உதவிப் பணிப்பாளர் | Executive Trainning Programme on Macroeconomic Policies – Hong Kong | 01-05 ஓகத்து 2016 |
| திருமதி.ஜே.சந்திரமோகன் | உதவிப் பணிப்பாளா | Financial Programming & Policies - Singapore | 11-18 யூலை 2016 |

| | | | |
|---|---|---|---|
| செல்வி.எச்.டி.ஏ.றுக்ஷிணி | உதவிப் பணிப்பாளர் | Introduction and Utilization of Foreign Capital of Inland Regions for Developing Countries - China | 25 பெப்ரவரி 2016முதல்04 மார்ச் 2016 வரை |
| | | Business and Technology meeting for Tax Systems | 18-22 ஒற்றோபர் 2016 |
| திருமதி.டி.ஜி.நிலூகா குமாரி | உதவிப் பணிப்பாளர் | Executive Trainning Programme on Macroeconomic Policies – Hong Kong | 01-05 ஓகத்து 2016 |
| | | Public Sector Accounting- Thailand | 11-12 ஒற்றோபர் 2016 |
| திரு. கே.எம். குமாரசிறி | உதவிப் பணிப்பாளர் | Financial Programming & Policies - Singapore | 21 பெப்ரவரிமுதல்05 மார்ச் 2016 வரை |
| திருமதி.எல்.டி.யூ.எம்.சொய்ஸா | உதவிப் பணிப்பாளர் | Knowledge sharing Programme - Korea | 03-08 ஏப்ரல் 2016 |
| | | Executive Trainning Programme on Macroeconomic Policies – Hong Kong | 12-16 ஏப்ரல் 2016 |

## 4.3.நிதி நிருவாகம் மற்றும் கணக்குகள்

### 4.3.1 வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளை பயன்படுத்தல்

2016 ஆம் ஆண்டில் தலைப்பு இல. 238, நிகழ்ச்சித் திட்டம் 1, கருத்திட்டம் 1 இன் கீழ் இத்திணைக்களத்திற்கு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டினால் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்ததுடன், அவ்வொதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்ட விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 6 : 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுகளை பயன்படுத்திய விதம்**

| செலவு விபரம் | 2016 மதிப்பீடு ரூபா | 2016 தேறிய ஒதுக்கீடுகள் ரூபா | 2016மெயச் செலவினம் ரூபா |
|---|---|---|---|
| **மீண்டெழும் செலவு** | 74,750,000 | 74,750,000 | 51,996,435.36 |
| ஆள்சார் படிகள் | 24,600,000 | 28,850,000 | 27,903,782.46 |
| பிரயாணச்செலவுகள் | 2,100,000 | 4,205,000 | 4,067,634.78 |
| வழங்கல்கள் | 2,300,000 | 2,370,000 | 2,220,152.42 |
| பராமரிப்புச் செலவுகள் | 2,900,000 | 2,850,000 | 2,563,775.68 |
| ஒப்பந்த சேவைகள் | 42,100,000 | 35,725,000 | 14,660,723.44 |
| மாற்றல்கள் | 750,000 | 750,000 | 580,366.58 |

| | | | |
|---|---|---|---|
| **மூலதனச் செலவு** | 2,600,000 | 2,600,000 | 1,145,560.00 |
| புனரமைப்பும்மேம்படுத்தலும் | - | - | - |
| பற்றுக்கள் | 2,000,000 | 2,000,000 | 624,660.00 |
| மூலதன மாற்றல்கள் | - | - | - |
| ஆற்றல் விருத்தி | 600,000 | 600,000 | 520,900.00 |
| **முழு மொத்தம்** | 77,350,000 | 77,350,000 | 53,141,995.36 |

### 4.3.2அரசாங்க ஊழியர்களின் முற்பணக் கணக்கு

2016ஆம் ஆண்டுக்காக இத்திணைக்களத்தின் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் விபரங்கள் கீழ் வருமாறு அமைகிறது:

**அட்டவணை 7 : 2016 ஆம் ஆண்டுக்கான முற்பணக் கணக்குகளை பயன்படுத்திய விதம்**

| விபரம் | அனுமதித்த எல்லை ரூபா | உள்ளபடியான எல்லை ரூபா |
|---|---|---|
| ஆகக் கூடுதலான செலவின எல்லை | 3,000,000 | 2,961,925.00 |
| ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை | 1,300,000 | 1,773,964.17 |
| ஆகக் கூடுதலான வரவு மீதி எல்லை | 12,000,000 | 7,622,500.96 |

### 4.3.3. கணக்காய்வு ஐய வினா

2016 ஆம் ஆண்டில்,நிதிஅமைச்சின் முகாமைத்துவக் கணக்காய்வுப் பிரிவிலிருந்து04 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும், கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்திலிருந்து11 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் கிடைக்கப்பெற்றதோடு, அவற்றுக்கான பதில்கள் உரிய காலத்தில் வழங்கப்பட்டுள்ளன.